CRLMP No. 305 /2012 in CC 02/2012

6.3.2020

மசா . 1 திரு. முகமது சித்திக்

<u>குறுக்கு விசாரணை..(அரசு தரப்பில்)</u>

நான் தாக்கல் செய்த டிஸ்ஜார்ஜ் மனுவில் சொல்லப்படாத சம்பவங்களை முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. டிஸ்ஜார்ஜ் மனுவில் நான் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தொழிற்சாலை சட்டப்பிரிவு 105 ல் என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால் மேல் அதிகாரிகளிடம் வழக்கு தொடர தொழில் சாலை ஆய்வாளருக்கு மேல்அதிகாரியான அதிகாரியிடம் முன் அனுமதி பெறவேண்டும். பிரிவு 105 தொழில் சாலை சட்டப்படி ஆய்வாளர் தொழில் சாலை சட்டப்படி தகுந்த நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடியும் என்றால் சரியல்ல. தமிழ்நாடு தொழில்சாலை விதிகள் 1950 விதி 13A(c) ன் படி ஆய்வாளருக்கு வழக்கு தொடர அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேல் அதிகாரியின் அனுமதி பெற வேண்டும். ஆய்வாளருக்கே நேரடியாக வழகை தொடர அதிகாரம் உள்ளது என்றும், தொழில் சாலை சட்ட விதிகளில் சொல்லப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. குற்றம் நடந்து ஆய்வாளரின் கவனத்திற்கு வரும் போது மூன்று மாதத்திற்குள்ள குற்ற புகார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான். தொழில் சாலை ஆய்வாளர் சட்டப்படி செயல்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. மூன்று மாத காலத்திற்குள்ளாகவே தொழில் சாலை ஆய்வாளர் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. ஆய்வாளர் குற்ற முறையீட்டை நேரடியாக வேறு உயர் அதிகாரிகளின் அனுமதி பெறாமல் தாக்கல் செய்ய முடியும் என்றால் அது தவறு. அவ்வாறு குற்ற முறையீடு தாக்கல் செய்யமுடியும் என்று பல முன் தீர்ப்புகள் உள்ளன என்றால் சரியல்ல. இந்த மனு வழகை இழுத்தடிப்பதற்காகவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், இந்த வழக்கு ஆய்வாளர் அவர்களால் முறையாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>மறுவிசாரணை இல்லை</u>